சிவகங்கை கமிஷனர் நாற்காலியில் அமர்ந்த தவெக எம்எல்ஏவிற்கு நகராட்சி நோட்டீஸ்

சிவகங்கை, ஜூலை 9: சிவகங்கை நகராட்சி கமிஷனரின் சேரில் அமர்ந்த தவெக எம்எல்ஏவிற்கு, நகர்மன்றத் தலைவர் சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

சிவகங்கை நகராட்சி அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் தவெக எம்எல்ஏ குழந்தைராணி நாச்சியார் சென்றார். அவர், கமிஷனர் அறைக்கு சென்று கமிஷனர் அமர்ந்திருந்த சேரில் இருந்து அவரை எழுந்திருக்க செய்து விட்டு, அதில் அமர்ந்து ஆய்வு செய்தார். எம்எல்ஏவின் இந்த நடவடிக்கைக்கு கடும் கண்டனங்கள் எழுந்தன.

இந்நிலையில் சிவகங்கை நகராட்சி தலைவர் துரை ஆனந்த் சார்பில், வழக்கறிஞர்கள் அழகர்சாமி, கோதண்டராமன் ஆகியோர் எம்எல்ஏ குழந்தைராணிக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளனர்.

அதில், "நகராட்சி கமிஷனர் என்பவர் நகராட்சி நிர்வாகத் துறையால் நியமிக்கப்படும் ஒரு அரசு அதிகாரி. அவரது இருக்கை குறிப்பிட்ட நிர்வாக பதவிக்குரியது. சட்டப்பேரவை உறுப்பினர் என்பவர் மக்கள் பிரதிநிதி. நகராட்சி எல்லைக்குள் உள்ள வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்ய அவருக்கு முழு உரிமை உண்டு. ஆனால், நகராட்சி அலுவலகத்திற்கு வரும்போது, அவருக்கென ஒதுக்கப்படும் தனி அறையிலோ அல்லது பார்வையாளர் அரங்கிலோ அமர்ந்துதான் அதிகாரிகளுடன் ஆலோசிக்க வேண்டும். அரசு அதிகாரியின் இருக்கையில் அமர்ந்து உத்தரவிடுவது நிர்வாக நெறிமுறைகளுக்கு எதிரானது. காணொளி வாயிலாக நடைபெற்ற உயர் அதிகாரிகளின் கூட்டத்தில் பங்கேற்றிருந்த நகராட்சி ஆணையாளரை எழச் செய்து அவரது இருக்கையில் அமர்ந்தது கண்டனத்துக்குரியது. இச்செயல் நிர்வாக நெறிமுறைகளுக்கும், ஜனநாயக பண்புகளுக்கும் எதிரானது. இச்செயலுக்கு பொதுவெளியில் வருத்தம் தெரிவிக்க வேண்டும். இல்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டவாலி யாரும் பின்னாடி வராதீங்க...

தினமும் சைக்கிளில் கோர்ட்டுக்கு வரும் நீதிபதி

வீட்டில் இருந்து சாப்பாடு எடுத்து வந்து ஊழியர்களுடன் அமர்ந்து சாப்பிடுகிறார்

கோவை, ஜூலை 9: அதிகாரமும் அந்தஸ்தும் கைநிறைய இருந்தாலும், தலைக்கனம் இல்லாமல் எளிய மனிதர்களாக வாழ்பவர்களை இந்த உலகம் எப்போதும் உற்று நோக்கிக்கொண்டே இருக்கிறது. பந்தா இல்லாத இத்தகைய அதிகாரிகளின் யதார்த்தமான செயல்பாடுகள், சாமானிய மக்களை எளிதில் ரொம்பவே கவர்ந்து விடுகின்றன. அதனால்தான், தங்களின் எளிமையால் தனித்து தெரியும் மனிதர்கள் குறித்த செய்திகள், இணையத்தில் அடிக்கடி பேசுபொருளாகி வைரலாகி விடுகின்றன. அந்த வகையில், கோவையில் பணியாற்றி வரும் மாவட்ட நீதிபதி சிவக்குமார் என்பவரின் எளிய வாழ்க்கை முறையும், அரசு பணியும் இப்போது அனைவரின் கவனத்தையும் ஈர்த்து, பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

53 வயதாகும் நீதிபதி பி.கே.சிவகுமார், நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்தவர். இவர், இதற்கு முன்பு சேலம், கோவை, மேட்டுப்பாளையம், புதுக்கோட்டை உள்பட பல்வேறு இடங்களில் மாஜிஸ்திரேட் மற்றும் சார்பு நீதிமன்றங்களில் திறம்பட பணியாற்றியுள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்புதான், இவர் மாவட்ட நீதிபதியாக பதவி உயர்வு பெற்று, கோவை மாவட்ட 5-வது கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றத்தில் இப்போது பணியாற்றி வருகிறார்.

நீதிபதி சிவக்குமார் தற்போதைய காலக்கட்டத்திலும் மிக எளிமையாகவும், நேர்மையாகவும் வாழ்ந்து காட்டி வருகிறார். கார்ஸ்ட்லி வாகனங்களை பயன்படுத்தாமல், தினமும் கோர்ட்டுக்கு தனது சைக்கிளிலேயே வருவதை அவர் வழக்கமாக கொண்டுள்ளார். வீட்டிலிருந்து மதிய சாப்பாடு எடுத்து வரும் அவர், தனியாக உட்கார்ந்து சாப்பிடாமல் நீதிமன்ற ஊழியர்களுடன் ஒன்றாக உட்கார்ந்து எந்த பாகுபாடும் இல்லாமல் உணவு சாப்பிடுகிறாராம். நீதிமன்ற வளாகத்தில் எப்போதுமே தனியாக நடந்து செல்லும் குணம் கொண்டவரான இவர், தனக்கு பின்னால் டவாலி, பிரத்யேக அங்கி அணிந்துகொண்டு வரக்கூடாது என்கிறார். சேவகர்கள் யாரும் தன்னுடன் வருவதை ஒருபோதும் விரும்பியதே இல்லையாம். நீதிபதியின் இந்த யதார்த்தமான செயல்பாடுகள், அரசு பொறுப்பில் இருப்பவர்கள் மக்களுடன் எவ்வளவு எளிமையாக பழக வேண்டும் என்பதற்கு மீண்டும் ஒரு உதாரணமாகி இருக்கிறது.

மேகதாது அணை விவகாரத்தில்

கர்நாடக மாநில முதல்வர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

தமிழக அரசுக்கு பி.ஆர்.பாண்டியன் வலியுறுத்தல்

திருவாரூர், ஜூலை 9: கர்நாடக முதல்வர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர வேண்டும் என தமிழகை அரசை பி.ஆர்.பாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு தலைவர் பி.ஆர்.பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகாவின் வரைவுத்திட்ட அறிக்கைக்கு எதிராக தடை விதிக்க கோரி தமிழகம் வழக்கு தொடர்ந்தது. 2025 நவம்பர் 13ம் தேதி நீதியரசர்கள் வழங்கிய தீர்ப்பில், வரைவு திட்ட அறிக்கை தயார் செய்ய ஒவ்வொரு மாநிலங்களுக்கும் உரிமை உள்ளது. அதற்கு தடை விதிக்க முடியாது. விரைவு திட்ட அறிக்கை சட்டத்திற்கு உட்பட்டதா? என்பதை ஒன்றிய அரசும், நீர் வள ஆணையமும் முடிவு எடுத்து கொள்ளும். தடை விதிக்க இயலாது என்கிற தீர்ப்பை கர்நாடகம் தனக்கு அணை கட்டுவதற்கு சாதகமாக பயன்படுத்தக்கூடாது என்பதை தெளிவுபடுத்தி உள்ளது.

கர்நாடகாவில் புதிய முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள டி.கே. சிவக்குமார், ஒன்றிய ஜல்சக்தி துறை அமைச்சர் பாட்டீலை சந்தித்து தமிழகம் உச்ச நீதிமன்றத்தில் மேகதாது அணைக்கு எதிராக போடப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எங்களுக்கு அணை கட்ட அனுமதி வேண்டும் என கோரிக்கை விடுப்பது நீதிமன்ற தீர்ப்பை அவமதிக்கும் நடவடிக்கை ஆகும்.

எனவே, டி.கே.சிவக்குமார் மீது தமிழக அரசு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர வேண்டும். டிகே சிவகுமார் தூண்டுதலில் கர்நாடக இன வெறியர் வாட்டாள் நாகராஜ் ஜூலை 15ல் ஓசூர் மற்றும் பெங்களூர் சாலையை மறித்து போராட்டம் நடத்த உள்ளதாக அறிவித்துள்ளார். தமிழக திரைப்படங்கள் கர்நாடகாவில் திரையிட அனுமதிக்க மாட்டோம் என அறிவித்துள்ளார். இதனால் தமிழகம், கர்நாடகா இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

எந்நேரமும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடிய பேராபத்து ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி தேசிய தலைமையிடம் எடுத்துரைத்து மேகதாட்டு பிரச்சனையில் சட்டப்படி நடந்து கொள்ள டி.கே சிவக்குமாருக்கு அறிவுறுத்த வேண்டும். காவிரி பிரச்சனையில் இன மோதலை உருவாக்குவதை அனுமதிக்க கூடாது. கர்நாடகாவால் தமிழர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் காங்கிரஸ் தேசிய தலைமை பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

முதல்வர் குறித்து விமர்சனம்

திமுக நிர்வாகிக்கு நிபந்தனை ஜாமீன்

தேன்கனிக்கோட்டை, ஜூலை 9: கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை அருகே யுள்ள போடம்பட்டி கிராமத்தில் வசிப்பவர் அன்பானந்தம் (28), திமுகவின் ஜென்-சி ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராக உள்ளார். இவர் தமிழக முதல்வர் விஜய், திரிஷாவுடன் பிறந்தநாள் கொண்டாடியது குறித்து விமர்சனம் செய்து வீடியோ ஒன்றை பதிவிட்டு இருந்தார். இது குறித்து தவெக நிர்வாகிகள் கொடுத்த புகாரின்பேரில் கடந்த 23ம் தேதி ராயக்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அன்பானந்தம் தேன்கனிக்கோட்டை நீதிமன்ற நீதிபதி தினேஷ்குமார் முன்னிலையில் சரணடைந்தார். இவ்வழக்கை விசாரித்த நீதிபதி, ஒரு நாள் போலீஸ் கஸ்டடியில் வைத்து விசாரிக்க உத்தரவிட்டார். கஸ்டடி முடிந்து நேற்று ஆஜர்படுத்தப்பட்ட அன்பானந்தத்திற்கு நிபந்தனை ஜாமீன் வழங்கிய நீதிபதி 15 நாட்கள் ராயக்கோட்டை ஸ்டேஷனில் கையெழுத்திட வேண்டும் என கூறினார்.

திருமணத்திற்கு பெற்றோர் மறுத்ததால்

காதலன் தூக்கிட்டு தற்கொலை நரம்பை அறுத்து காதலியும் சாவு

பந்தலூர், ஜூலை 9: திருமணத்திற்கு பெற்றோர் மறுத்ததால் காதலன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இதையடுத்து நரம்பை அறுத்து காதலியும் உயிரிழந்தார்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி காந்தல் பகுதியை சேர்ந்தவர் பிரசாந்த் (26). இவர் நெல்லியாளம் நகராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில், அவரது உறவினர்கள் நேற்று பிரசாந்த்துக்கு தொலைபேசியில் அழைத்தனர். அவர் அழைப்பை ஏற்காததால் நகராட்சியை தொடர்பு கொண்டு பேசினர். அப்போது, பிரசாந்த் கடந்த ஒரு வாரமாக அலுவலக பணிக்கு வரவில்லை என சொல்லி உள்ளனர். இதையடுத்து, நகராட்சி ஊழியர் பந்தலூர் பஜாரில் அவர் தங்கியிருந்த அறைக்கு பார்த்து உள்ளார். கதவை தட்டி திறக்காதால் ஜன்னலை திறந்து பார்த்த போது அறையில் இருந்த பேன் கம்பியில் தூக்கிட்ட நிலையில் சடலமாக தொங்கினார். விசாரணையில், பிரசாந்த் காந்தல் பகுதியை சேர்ந்த 20 வயதான ஒரு பெண்ணை காதலித்து வந்ததும், அப்பெண்ணை திருமணம் செய்து வைக்குமாறு பெற்றோரிடம் கூறி வந்தார். ஆனால், திருமணம் செய்து வைக்காததால் மனம் உடைந்த அவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

இந்நிலையில், பிரசாந்த் இறந்த சம்பவம் அவரது காதலிக்கு தெரிய வந்ததும் அவர் கை நரம்புகளை அறுத்தும், மருந்து குடித்தும் தற்கொலை செய்து கொண்டார்.

வடக்கு மத்திய இரயில்வே

மின் கொள்முதல்–ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.02/2026–27 தேதி: 06.07.2026

மின்–கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

முதுநிலை கோட்ட பொருள் மேலாளர், வடக்கு மத்திய இரயில்வே, ஜான்சி அவர்கள், மற்றும் இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, பின்வரும் மின்–கொள்முதல் முறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

வ. எண்.	டெண்டர் எண்.	சுருக்கமான விளக்கம்	அளவு	டெண்டர் திறக்கும் நாள்
1	92255862C	முழுமையான இரண்டாம் நிலை லாஷிங் செயின் வழங்கல்	4420 Nos	30.07.2026

குறிப்பு: மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழுமையான விவரங்களை IREPS இணையதளத்தில் அதாவது, https://www.ireps.gov.in–இல் காணலாம் மற்றும் பதிவிறக்கம் செய்யலாம். ஒப்பந்தப்புள்ளியில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் இருப்பின், தயவுசெய்து இந்த இணையதளத்தைத் தொடர்ந்து பார்வையிடவும். செய்தித்தாள்களில் தனிப்பட்ட திருத்தங்கள் அல்லது மாற்றங்கள் எதுவும் வெளியிடப்படாது. 1552/26 (A)

North central railways | @CPRONCR | www.ncr.indianrailways.gov.in

வடக்கு மத்திய இரயில்வே

மின் கொள்முதல்–ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.23/2026 தேதி: 06.07.2026

மின்–கொள்முதல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

முதுநிலை கோட்ட பொருள் மேலாளர், வடக்கு மத்திய இரயில்வே, பிரயாக்ராஜ் அவர்கள், மற்றும் இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, பின்வரும் மின்–கொள்முதல் முறை மூலமாக ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

டெண்டர் எண்.	சுருக்கமான விளக்கம்	அளவு	முன்வைப்புத் தொகை (ரூ.)	டெண்டர் திறக்கும் நாள்
19266280	ஆட்டோமேடிக் லோகோ வாஷிங் பிளாண்ட்	01 No.	4,20,080/-	05.08.2026
19266289	சிஎன்சி அண்டர் ஃப்ளோர் வீல் லேத்	01 No.	15,89,680/-	12.08.2026
19265366	டிராப் பிட் டேபிள்	01 No.	8,74,270/-	19.08.2026

குறிப்பு: 1. மேற்கூறிய ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழுமையான விவரங்களை IREPS இணையதளத்தில் அதாவது, https://www.ireps.gov.in–இல் காணலாம் மற்றும் பதிவிறக்கம் செய்யலாம். 2. மின்–ஏலங்களின் வடிவத்தில் இல்லாத ஏலங்கள் மேற்கண்ட டெண்டர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படாது. இந்த நோக்கத்திற்காக, விற்பனையாளர்கள் தங்களை IREPS வலைத்தளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும், மேலும் IT சட்டம்–2000 இன் கீழ் CCA ஆல் வழங்கப்பட்ட டிஜிட்டல் கையொப்ப சான்றிதழுடன் பதிவு செய்ய வேண்டும். 3. நிதி விகிதப் பக்கத்தில் உள்ளிடப்பட்ட மற்றும் முறையாக டிஜிட்டல் முறையில் கையொப்பமிடப்பட்ட விகிதங்கள் பரிசீலிக்கப்படும். விகிதங்கள் மற்றும் வேறு எந்த படிவத்திலும் / லெட்டர் ஹெட்டிலும் விற்பனையாளர்களால் இணைக்கப்பட்டிருந்தால், அவை உடனடியாக புறக்கணிக்கப்படும் மற்றும் பரிசீலிக்கப்படாது. 4. இணைக்கப்படும் ஆவணங்களில், அவற்றின் உள்ளடக்கப் பகுதியில் கையொப்பமிடப்பட வேண்டும். இந்த டெண்டர் அறிவிப்பு http://www.ncr.indianrailways.gov.in இல் பதிவேற்றப்பட்டுள்ளது. ஏதேனும் சிரமம் ஏற்பட்டால் IREPS இணையதளத்தில் உள்ள உதவி மையத்தை அணுகலாம். 1549/26 (D)

North central railways | www.ncr.indianrailways.gov.in | @ CPRONCR

உச்ச நீதிமன்றம் அதிரடி உத்தரவு

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் விதிக்கப்பட்ட சுரங்கங்களுக்கான தடை தொடரும்

சென்னை, ஜூலை 9: தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் கனிம மணல் எடுக்க 2013ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தமிழக அரசு தடை விதித்தது. இருப்பினும் மேற்கண்ட உயர்நீதிமன்ற உத்தரவை மீறி கனிமங்களை வெட்டி எடுத்தல், பதுக்குதல் மற்றும் கடத்துதல் ஆகியவை சட்ட விரோதமாக மேற்கொள்ளப்பட்டது.

இதைத்தொடர்ந்து திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பல தனியார் நிறுவனங்கள் சட்டவிரோதமாக தாது மணல் கொள்ளையில் ஈடுபட்டதாக எழுந்த தொடர் புகாரின் அடிப்படையில், இந்த விவகாரத்தை சிபிஐக்கு மாற்றி அமைத்து கடந்த 2025ம் ஆண்டும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. அதேப்போன்று அரசுக்கு ஏற்பட்ட பெருத்த இழப்பீடான ரூ.5,832 கோடியை தனியார் நிறுவனங்களிடம் வசூலிக்கவும் மற்றும் அவர்களது இருப்புக்களை பறிமுதல் செய்ய வேண்டும். குறிப்பாக சட்டவிரோத சுரங்கம் மற்றும் மணல் திருட்டு தொடர்பான புகார்களை கனிம வளத்துறை மற்றும் புவியியல் துறை அல்லது மாவட்ட காவல்துறைக்கு உடனடியாகத் தெரிவிக்கலாம் எனவும் நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டது.

இந்நிலையில் மேற்கண்ட விவகாரத்தில் தனியார் நிறுவனம் ஒன்று தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கானது உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஆர். மகாதேவன் மற்றும் மன்மோகன் ஆகியோர் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், "மேற்கண்ட வழக்கில் சட்ட விரோத சுரங்கள் குறித்த ஆவணங்கள் அனைத்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. சுரங்கள் விவகாரத்தில் முன்னதாக இடைநிறுத்தப்பட்ட குத்தகை தடை என்பது தொடரும். இதில் பிரச்சனைகள், உண்மை அம்சங்கள் ஆகியவை அனைத்தையும் முழுமையாக ஆய்வு செய்த பின்னர் தான் உயர்நீதிமன்றம் விரிவான உத்தரவை பிற்பபித்துள்ளது. மேலும் தனி நீதிபதியின் முந்தைய உத்தரவையும் ரத்து செய்துள்ளது. குறிப்பாக அரசியலமைப்பின் 136வது சட்ட விதிகளின் அடிப்படையில் அதிகார வரம்பை பயன்படுத்தும் எந்தவொரு பிழையையும் நாங்கள் இந்த வழக்கில் காணவில்லை. எனவே இவை அனைத்தையும் அடிப்படையாக கொண்டு மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்கிறோம். அதேப்போன்று இதே கோரிக்கையோடு மனுக்கள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் அதுவும் முடித்து வைக்கப்படுகிறது" என்று உத்தரவு பிறப்பித்தனர்.

Chola Enter a better life

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

கார்பரேட் அலுவலகம்– சோழா க்ரெஸ்ட், சி 54& சி 55, சூப்பர் B–4, திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032, தமிழ்நாடு.

மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு (மின்-ஏலப்புள்ளி மூலம் மட்டுமான விற்பனை)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9 (1) இன் கீழ் அசையா கடனீட்டுச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் நிரல்(A)–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பாகவும் வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம் / உரிமை அளிக்கப்பட்ட, சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் நிரல் (C) இல் விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, நிரல் (D) இல் விவரிக்கப்பட்டவாறு **சுவாதீனம்** செய்யப்பட்டுள்ளது. அவை கீழே கீழ்க்குறிப்பிட்ட விவரங்களின்படி **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு"**, மேலும் **"உள்ளது எதுவோ அது"** அடிப்படையில் விற்பனை செய்யப்பட்ட உள்ளது. இதன்மூலம் நிரல்(A)–இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசு, சட்டப்பூர்வ பிரதிநிதிகள் **(தெரிந்த அல்லது தெரியாத)**, செயல்பிரதிநிதி(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்) மற்றும் உரிமையற்றோர்(கள்) ஆகியோருக்கு கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) கீழ் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் & நிபந்தனைகளுக்கு, **சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்** கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது https://www.cholamandalam.com & www.auctionfocus.in ஆகியவற்றில் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

வ. எண்	[A] கடன் கணக்கு எண்/ கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/ ஜாமின்தாரர்(கள்)பெயர்கள்	[B] மீட்கப்பட வேண்டிய நிதியுவைத்தொகைகள் (கடனீட்டுக்கடன்கள்)	[C] அசையாச் சொத்து விவரம் / கடனீட்டுச் சொத்து	[D] சுவாதீனம் வகை	[E & F] நிர்ணயவிலை(₹இல்) / முன்வைப்புத்தொகை (₹இல்)	[G] ஏலம் நாள் மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண்(கள்)HL25MDV000123995 1. திரு/திருமதி. லதா பாஸ் 2. திரு/திருமதி. பிந்து A வ.எண்.1&2 இன் முகவரி: எண்: 117, ராதா நகர், நெல்லிக்குப்பம் சாலை, நந்திவரம், கூடுவாஞ்சேரி, இன்டிமேட் பேஷன்ஸ் அருகில், காஞ்சிபுரம், தமிழ்நாடு – 603202. வ.எண்.1&2 இன் முகவரி: எண்: பிளாட் எண்.123, S.No.171/3A மற்றும் 171/3B, புதிய S.No.171/3 B2, பகுதி, எம்.ஜி.நகர் 7வது பகுதி., ஆதனூர் கிராமம், குன்றத்தூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு – 603202.	27.03.2026 தேதியின்படி ரூ.20,20,889/- (ரூபாய் இருபது லட்சத்து இருபது ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பது மட்டும்)	மனை எண். 123 பகுதி, பழைய S.No. 171/3A மற்றும் 171/3B, பட்டாவின்படி புதிய S.No. 171/3B2, ஆதனூர் கிராமம், வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 1260 சதுர அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. **எல்லைகள்:– வடக்கில்:** S.No.171/2B–இல் உள்ள நிலம்; **தெற்கில்:** சாலை; **கிழக்கில்:** காலி நிலம்; **மேற்கில்:** S.No.171/3A–இல் உள்ள நிலம். **அளவீடு:–** கிழக்கு மேற்காக வடக்குப் பக்கத்தில்: 35 அடி; கிழக்கு மேற்காக தெற்குப் பக்கத்தில்: 35 அடி; வடக்கு தெற்காக கிழக்குப் பக்கத்தில்: 36 அடி; வடக்கு தெற்காக மேற்குப் பக்கத்தில்: 36 அடி. இந்நிலமானது கூடுவாஞ்சேரி சார்–பதிவு மாவட்டம் மற்றும் தாம்பரம் பதிவு மாவட்டம் ஆகியவற்றின் எல்லைக்குள் அமைந்துள்ளது	ஆக்கப்பூர்வ சுவாதீனம்	ரூ.37,80,000/- (ரூபாய் முப்பத்தேழு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) ரூ.3,78,000/- (ரூபாய் மூன்று லட்சத்து எழுபத்தெட்டாயிரம் மட்டும்)	14-08-2026 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (ஒப்பந்தப்புள்ளி ஆவணம் விதிமுறைகளில் தலா 5 நிமிடங்கள் தன்னிச்சை நீட்டிப்புகளுடன்)

சொத்து பார்வையிடும் நாள் & நேரம்: 12.08.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை | குறைந்தபட்ச ஏலம் உயர்த்தும் தொகை ₹10,000/-

ஏலப்புள்ளி / முன்வைப்புத்தொகை / பங்கேற்பதற்கான விண்ணப்பக் கடிதம் சமர்ப்பிக்க கடைசி நாள்: 13.08.2026 மாலை 5 மணி வரை.

* அதற்கான பணப்பட்டுவாடா மற்றும் / அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவுகள், கட்டணங்கள் ஏனையவற்றுடன், கடன் ஒப்பந்தத்தின்படி பொருந்துமாறு மேற்கொண்டு வட்டியுடன்.

சொத்தைப் பார்வையிடுதல் அல்லது ஏல ஆவணத்தைப் பெறுதல் மற்றும் மேலும் ஏதேனும் பிற விளக்கங்களுக்கு சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரி 1. S.டெல்லி கணேஷ், அலைபேசி எண் 8610565806 மற்றும் மின்னஞ்சல் : ganeshsed@chola.murugappa.com, 2. அரிஸ்டாட்டில், அலைபேசி எண் 9789537656 மற்றும் மின்னஞ்சல் : aristotles@chola.murugappa.com மூலம் தொடர்பு கொள்ளவும். சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் & பைனான்ஸ் கம்பெனி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில் மேற்கூறிய அசையாச் சொத்துகள்/ கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான வில்லங்கங்கள் எதுவுமில்லை.

ஒம்/–

நாள் : 08.07.2026
இடம்: செங்கல்பட்டு, தமிழ்நாடு

அதிகாரப்பூர்வ அதிகாரி
சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெடுக்காக

கோடை உழவு மானியம்... முதல் பக்க தொடர்ச்சி

மற்றும் நோயை பரப்பக் கூடிய பாக்டீரியாக்கள், நூல் புழுக்கள் அனைத்தும் முழுமையாக மண்ணின் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுகிறது என்பதால் லட்சக்கணக்கான மானாவாரி விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற்று வந்தனர்.

தமிழ்நாடு அரசின் வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் கோடை உழவு மானியத் திட்டத்தின் கீழ் மானாவாரி விவசாய நிலங்களில் கோடை உழவு செய்வதற்காக விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கப்படுகிறது. மானாவாரி விவசாய நிலத்தில் கோடை உழவு செய்யும் விவசாயிகளுக்கு, ஏக்கர் ஒன்றிற்கு 50 சதவீதம் மானியமாக, ரூ.800 முதல் ரூ.1,250 வரை அரசு சார்பில் வழங்கப்படுகிறது. இந்த தொகை மாவட்டங்களின் தன்மைக்கேற்ப மாறுபடும். இந்த திட்டத்தின் கீழ், ஒரு விவசாயி குறைந்தபட்சமாக ஒரு ஏக்கர் முதல் அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை உழவு செய்து மானியம் பெற்றுக் கொள்ளலாம். மேலும், சிறு, குறு, ஆதிதிராவிட, பழங்குடி மற்றும் பெண் விவசாயிகளுக்கு மானியம் வழங்குதலில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. .

இந்த திட்டத்தில் வழங்கப்படும் மானியமானது நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கே செலுத்தப்படுவதால், இடைத்தரகர்கள் யாரும் இல்லாமல் நேரடியாக விவசாயிகளிடமே பணம் சேர்ந்து விடும் என்பதால் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான விவசாயிகள் இத்திட்டத்தினால் பயன் பெற்று வந்தனர். இடையில் சிறிது காலம் இத்திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டு கடல்பாசி உரம், இயற்கை உரம் வழங்கப்பட்டது. பின்னர் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று கோடை உழவு மானியத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் விவசாயிகள் வங்கிக் கணக்கிற்கு மானியத்தொகையை அரசு விடுவித்து வந்தது.

ஆனால் புதிதாக பொறுப்பேற்ற அரசு, ஜூலை மாத முதல் வாரம் முடிந்து விட்ட நிலையிலும் கோடை உழவு செய்ய விவசாயிகளிடம் எவ்வித விண்ணப்பம் பெறவோ, இதுகுறித்த அறிவிப்போ வெளியிடவில்லை. அதிகாரிகள் முந்தைய அரசு, கோடை கால உழவிற்கு வழங்கிய மானியம் குறித்து முதல்வரிடமோ, துறை அமைச்சரிடமோ எடுத்துக் கூறவில்லை. இதனால் மாநிலம் முழுக்க லட்சக்கணக்கான விவசாயிகள் கோடை உழவு மானியம் கிடைக்காமல் ஏமாற்றமடைந்து உள்ளனர்.

மேலும் கடந்த காலங்களில் அரசு ஏக்கருக்கு வழங்கிய உழவு மானியத்தை விலைவாசி உயர்வை கணக்கில் கொண்டு உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் விவசாய சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

**OMKAR